RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-339 | 04 டிசம்பர் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## கல்லூரி மாணவர் உயிரிழந்த விவகாரம்! அவசர சிகிச்சை பிரிவில் சேவையாற்ற உத்தரவிட்டு 4 பேருக்கு நிபந்தனை ஜாமீன்

சென்னை, டிச.4



மாநிலக் கல்லூரி மாணவர் தாக்கப்பட்டு உயிரிழந்த விவகாரத்தில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் 4 பேருக்கு அரசு மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் சேவையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஜாமீன் வழங்கி உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா உத்தரவிட்டுள்ளார்.

சென்னை மாநிலக் கல்லூரி மாணவரான திருத்தணியைச் சேர்ந்த சுந்தரை, கடந்த அக்.4ம் தேதியன்று சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சரமாரியாக தாக்கினர். சுந்தரை அவர்களிடமிருந்து மீட்ட ரயில்வே பாதுகாப்பு படையினர், உயிருக்கு ஆபத்தான நிலையில் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்த்தனர்.

கடந்த அக்.9ம் தேதியன்று அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். இந்த சம்பவம் தொடர்பாக பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் கைதான மாணவர்கள் சந்துரு, ஈஸ்வரன், ஈஸ்வர், யுவராஜ் ஆகிய 4 பேரும் தங்களுக்கு ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பாக கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது ஜாமீன் கோரிய மாணவர்களின் பெற்றோரை வரவழைத்து அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கும் நீதிபதி அறிவுரை கூறினார்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது 2 மாணவர்கள் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவிலும், 2 பேர் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவிலும் மறுஉத்தரவு வரும் வரை காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மருத்துவ ஊழியர்களுடன் இணைந்து நோயாளிகளுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டு விசாரணையை டிச.20க்கு தள்ளிவைத்தார். மேலும், அன்றைய தினம் பச்சையப்பன் மற்றும் மாநிலக் கல்லூரியின் முதல்வர்கள் இருவரும் ஆஜராக வேண்டும் எனவும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

## தி.மலை மண் சரிவில் உயிரிழந்த 7 பேர் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் முதல்வர் உத்தரவு

சென்னை, டிச.4






திருவண்ணாமலையில் கனமழையின் காரணமாக பாறை உருண்டு வந்து வீட்டின் மேல் விழுந்ததில் உயிரிழந்த 7 பேரின் குடும்பத்தினருக்கும் தலா 5 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவராண நிதியிலிருந்து வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், வ.உ.சி. நகர் 11வது தெருவில் வசித்து வந்த .ராஜ்குமார் என்பவரது வீட்டின் மீது 01122024 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் கனமழையின் காரணமாக மரம் விழுந்ததை அறிந்து அவர் வீட்டின் கதவினை திறக்க முற்பட்டபோது மலையிலிருந்து பெரிய பாறை உருண்டு வந்து வீட்டின் மேல் விழுந்ததில் அவரது வீடு மண் மற்றும் பாறையால் மூடப்பட்டு இடிந்துள்ளது. இதனையறிந்து மாவட்ட நிர்வாகத்தினரால் தேசிய பேரிடர் மீட்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அப்படையின் கமாண்டர் உட்பட 39 வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், நேற்று 0212 2024 மாலை 6.30 மணியளவில் தேசிய பேரிடர் மீட்புப் படையினரின் முயற்சிகள் பலனளிக்காமல் துரதிஷ்டவசமாக அந்த வீட்டின் உள்ளே இருந்த ராஜ்குமார் மற்றும் அவரது மனைவி மீனா (வயது 27), மகன் கௌதம் (வயது 9), மகள் இனியா (வயது 5), பக்கத்து வீட்டில் வசித்து வரும் சரவணன் என்பவரின் மகள் ரம்யா (வயது 7) மஞ்சுநாதன் என்பவரின் மகள் விநோதினி (வயது 14) மற்றும் சுரேஷ் என்பவரின் மகள் மகா (வயது 7) ஆகிய ஏழு நபர்கள் மண்ணுக்கடியில் சிக்கி உயிரிழந்தனர். இந்தத் துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவராண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்." எனத் தெரிவித்துள்ளார்.

## முன்பதிவு செய்த நேரத்தில் செல்லுங்கள் சபரிமலை பக்தர்களுக்கு டிஜிபி சங்கர் ஜிவால் அறிவுரை

சபரிமலை, டிச.4



சபரிமலையில் ஏற்கெனவே பதிவு செய்த நேரத்தில் சென்றால், சிரமமின்றி சுவாமி தரிசனம் செய்யலாம் என்று தமிழக பக்தர்களுக்கு டிஜிபி சங்கர் ஜிவால் அறிவுறுத்தி உள்ளார்.

தேவையற்ற நெரிசலை தவிர்க்க, தமிழகத்தில் இருந்து சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு டிஜிபி சங்கர் ஜிவால் அறிவுரை வழங்கி உள்ளார். அதன் விபரம்:

சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கூட்ட நெரிசலை தவிர்க்க தரிசன வரிசைக்கான டிஜிட்டல் முன்பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். இதன்மூலம் சபரிமலையில் அதிக நெரிசலை தவிர்க்கலாம் என்று கேரள காவல்துறை அறிவித்துள்ளது.

சபரிமலையில் நேற்று முன்தினம் வரை 11.12 லட்சத்துக்கு மேற்பட்டோர் தரிசனத்துக்கு சென்றுள்ளனர். கடந்த 15ம் தேதி முதல் 1.95 லட்சம் பேர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்துக்கு முன்னரோ, பின்னரோ வந்துள்ளனர். ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரத்தை பின்பற்றாமல் தரிசனத்துக்கு வருவோர் எண்ணிக்கை கடந்த 15ம் தேதி முதல் அதிகரிப்பதை இது குறிக்கிறது. எனவே, குறிப்பிட்ட நேரத்தில் பக்தர்கள் தரிசனம் செய்ய வந்தால், சிரமம், நெரிசல் இன்றி, சுமுகமாக சுவாமி தரிசனம் செய்யலாம் என கேரள மாநில காவல் துறை வலியுறுத்தியுள்ளது. இதை பக்தர்கள் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

'பதினெட்டாம் படியை அடைய வரிசை முறையை பின்பற்றவும். பம்பையில் இருந்து சன்னிதானத்துக்கு செல்லும்போது கூட்டத்தின் அளவை கண்டு அதற்கேற்ப செல்லவும். இலவச உதவி எண் '14432' ஐ பயன்படுத்தி எந்தவித உதவிக்கும் காவல் துறையை அணுகலாம். சந்தேகத்துக்கிடமான நபர்கள் இருந்தால் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கவும். ஒதுக்கப்பட்ட நிறுத்தங்களில் மட்டுமே வாகனங்களை நிறுத்தவும். குழந்தைகள், வயதான பெண்கள் அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும் என்பது உட்பட 17 அறிவுரைகளை கடைபிடிக்குமாறு டிஜிபி வலியுறுத்தி உள்ளார். வரிசையில் முந்தி செல்ல தாவி குதிக்க கூடாது. ஆயுதங்கள், வெடிபொருட்களை கொண்டு செல்ல கூடாது என்று செய்யக்கூடாதவை என மேலும் 17 அறிவுரைகளையும் டிஜிபி சங்கர் ஜிவால் வழங்கி உள்ளார்.

## போதைப் பொருள் வழக்கில் ஜாபர் சாதிக், அவரது சகோதரருக்கு ஜாமீன் வழங்க அமலாக்கத் துறை கடும் ஆட்சேபம்

புதுடில்லி, டிச.4



உணவுப்பொருட்கள் பெயரில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு போதைப் பொருட்களை கடத்திய ஜாபர் சாதிக் மற்றும் அவரது சகோதரர் முகமது சலீமுக்கு ஜாமீன் வழங்க அமலாக்கத்துறை தரப்பில் கடும் ஆட்சேபம் தெரிவித்து சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

டெல்லியில் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் கைதான திரைப்படத் தயாரிப்பாளரும், திமுக முன்னாள் நிர்வாகியுமான ஜாபர் சாதிக்கை, அமலாக்கத்துறை அதிகாரிகள் சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் கடந்த ஜூன் 26ம் தேதி கைது செய்தனர். பின்னர் அவருடைய தம்பி முகமது சலீமையும் இந்த வழக்கில் அமலாக்கத்துறையினர் கைது செய்தனர்.

இந்த வழக்கில் ஜாமீன் கோரி ஜாபர் சாதிக், முகமது சலீம் இருவரும் சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு சிபிஐ நீதிபதி எழில்வேலவன் முன்பாக நிலுவையில் இருந்து வருகிறது. அவர்களின் ஜாமீன் மனுவுக்கு பதிலளிக்க அமலாக்கத்துறைக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, இருவருக்கும் ஜாமீன் வழங்க ஆட்சேபம் தெரிவித்து அமலாக்கத்துறை உதவி இயக்குநர் ராகுல் வர்மா சார்பில் அமலாக்கத்துறை சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ரமேஷ் பதில் மனு தாக்கல் செய்தார். அதில் கூறியிருப்பதாவது:

உணவுப் பொருட்களின் பெயரில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு போதைப் பொருட்களை ஜாபர் சாதிக் கடத்தியுள்ளனர். இதன்மூலம் கிடைத்த பெரும் தொகையை கொண்டே திரைப்படத்துறையிலும், ரியல் எஸ்டேட் உள்ளிட்ட பல்வேறு பினாமி நிறுவனங்களிலும் ஜாபர் சாதிக் முதலீடு செய்துள்ளார். சட்டவிரோதமாக ஈட்டிய தொகையைக் கொண்டு ரூ.50 கோடிக்கு மேல் சென்னையில் பல்வேறு இடங்களில் சொத்துகளை வாங்கிக் குவித்துள்ளனர். ரூ. 4.38 கோடிக்கு சொகுசு கார்களை வாங்கியுள்ளார்.

ஜாபர் சாதிக் மற்றும் அவரது சகோதரருக்கு ஜாமீன் வழங்கினால் மீண்டும் இதே குற்றத்தில் ஈடுபடுவது மட்டுமின்றி, சாட்சிகளை கலைக்கவும், ஆவணங்களை அழிக்கவும் வாய்ப்புள்ளது. எனவே, இருவருக்கும் ஜாமீன் வழங்கக் கூடாது.

இவ்வாறு பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது. ஜாபர் சாதிக் மற்றும் முகமது சலீம் ஆகியோரின் ஜாமீன் மனு, இன்று (டிச.3) மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது.

## மாற்றுத்திறனாளிகள் தின விழாவினை முன்னிட்டு, 215 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய அமைச்சர்

சிவகங்கை டிச.4




சிவகங்கை மாவட்டம் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழா 2024ஐ முன்னிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட தனியார் மஹாலில் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் மற்றும் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி முன்னிலையில், மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவிக்கையில்,

இவ்விழாவின் மூலம் 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,14,000/ வீதம் என மொத்தம் ரூ.2,28,800/ மதிப்பீட்டிலான பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளும், 21 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,05,000/ வீதம் என மொத்தம் ரூ.22,05,000/ மதிப்பீட்டிலான நியோபோல்ட் வீல்சேர்களும், 36 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,01,800/ வீதம் என மொத்தம் ரூ.36,64,800/ மதிப்பீட்டிலான இணைப்புச்சக்கரம் பொருத்தப் பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.2,00,000/ வீதம் என மொத்தம் ரூ.4,00,000/ மதிப்பீட்டிலான விபத்து மரண உதவித்தொகைக்கான ஆணைகளும் என ஆக மொத்தம் 215 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.78,83,141/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜய குமார், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், சிவகங்கை நகர் மன்றத் தலைவர் சி.எம்.துரை ஆனந்த், நகர்மன்றத் துணைத் தலைவர் கார்கண்ணன், திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஆரோக்கிய சாந்தாராணி, 18 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் இராஜேஸ்வரி ராமதாஸ், பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் (மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்) திருமதி பிரியா உதயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மதுரை டங்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிராக வரும் டிச.9ல் சட்டப்பேரவையில் தனித்தீர்மானம் சபாநாயகர் அப்பாவு

சென்னை, டிச.4



"தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் வரும் டிச.9 மற்றும் 10 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும். முதல் நாளில், மாநில அரசின் அனுமதி பெறாமல், மதுரை மாவட்டத்தில் மத்திய அரசு அனுமதித்துள்ள டங்ஸ்டன் கனிம சுரங்கத்துக்கான உரிமையை ரத்து செய்வது குறித்த அரசின் தனித்தீர்மானத்தை தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் கொண்டு வருகிறார்," என்று தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு கூறியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், "அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம், இன்று சட்டப்பேரவைத் தலைவர் அறையில் நடைபெற்றது. இதில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு, ஏகமனதாக வரும் டிச.9 மற்றும் 10 ஆகிய இரண்டு தினங்கள் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

முதல் நாளான டிச.9 ம் தேதியன்று, கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கையினை தமிழக நிதி அமைச்சர் தாக்கல் செய்யவிருக்கிறார். அன்றைய தினம், மாநில அரசின் அனுமதி பெறாமல், மதுரை மாவட்டத்தில் மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ள டங்ஸ்டன் கனிம சுரங்கத்துக்கான உரிமையை ரத்து செய்வது குறித்த அரசின் தனித்தீர்மானத்தை தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் கொண்டு வருகிறார்.

இரண்டாவது நாள் டிச.10 ம் தேதியன்று, விவாதங்கள் நடைபெற்று பல மசோதாக்கள் நிறைவேற்றப்படும். கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கையும் நிகழ்த்தப்படும். இரண்டு நாட்களிலும் கேள்வி நேரம் உண்டு." என்று அவர் கூறினார்.

## ஒப்பந்த செவிலியர் 1,200 பேருக்கு நிரந்தர பணிக்கான ஆணை சுகாதாரத்துறை அமைச்சர் வழங்கினார்

சென்னை, டிச.4



சென்னை கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில் நேற்று மாலை நடந்த நிகழ்வில், அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த 1,200 செவிலியர்களுக்கு நிரந்தர பணிக்கான ஆணை மற்றும் கரோனா காலத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட 963 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான பணிக்கான ஆணைகளை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் செல்வ விநாயகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் ராஜமூர்த்தி, கூடுதல் இயக்குநர் சித்ரா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசும் போது, "திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை சுகாதாரத்துறையில் மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் என மருத்துவத் துறையில் மொத்தம் 20,440 பேருக்கு வெளிப்படையான கலந்தாய்வு நடத்தப்பட்டு, பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன" என்றார்.

# சோழிங்கநல்லூர் 190 வது வட்டம் பள்ளிக்கரணையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா




சோழிங்கநல்லூர் டிச.4

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 190 வது வட்டம் பள்ளிக்கரணையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் ஆணைக் கிணங்க, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் ஆலோசனைப்படி, நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு திமுக அரசின் சாதனை விளக்க கூட்டம் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு கண்ணபிரான் கோவில் பெருமாள் கோவில் சந்திப்பு திருவீதி அம்மன் ஆலயம் அருகில் 190 வது வட்டக் கழகச் செயலாளர் பி. ஆரோன் அரசு தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் அவைத்தலைவர் எஸ். பெருமாள், துணைச் செயலாளர்கள் எஃப். டேனிஷ், எஸ். சிவகுமார், கே. அமுதா குப்பன், பொருளாளர் ஜி. கே. திருமலை மற்றும் பகுதி பிரதிநிதிகள் எம். ஸ்ரீதர், பி.ஜி.முருகன், ஜெ. ஜான்வெஸ்லி, ஆர். டில்லிபாபு, டி. மோகனகிருஷ்ணன், செ.தெ.மா.ஆ.ந.கு.து அமைப்பாளர் எம். எஸ். மதியழகன், செ.தெ.மா.இ.அணி துணை அமைப்பாளர் எஸ். மாரிமுத்து, இளைஞர் அணி அமைப்பாளர்கள் எஸ். வினோத், கே .வெங்கட், எஸ். ஜெபஸ்டீன், டீ. குணா, எம். வேலு, எம். சுமிர்ராஜ்., தலைமை குழு பேச்சாளர்கள் இளஞ் செழியன் ர. ஜெயகுமரேஷ் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சென்னை தெற்கு மாவட்ட பிரதிநிதி எம். எஸ். செல்வகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழக்கம்போல் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் இரா. பாலசுப்பிரமணியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் என பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி, மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது மாவட்ட ஊனமுற்றோர் அலுவலர் சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம், வேலூர், பெங்களூர் டு சென்னை தேசிய நெடுஞ்சாலை அருகே புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலையில் இரண்டு நாள் பெய்த ஃபெஞ்சல் புயல் மழைக்கு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, குளம் போன்று தேங்கியுள்ள மழை நீர் பரிதவித்த வாகன ஓட்டிகள்... நெடுஞ்சாலை பொறியாளர்கள் பார்த்த வேலை பல வாகனங்கள் நீரில் மூழ்கி சேதம் அடைந்தன. இந்த சேதத்திற்கு இந்த வேலை பார்த்த பொறியாளர் இழப்பீடு வழங்குவார்களா?.

# பழனி கோயிலில் கார் தீ விபத்து அலட்சியமாக செயல்பட்ட துப்புரவு மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வலியுறுத்தல்





பழனி டிச.4

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு கேரளாவிலிருந்து சாமி தரிசனம் செய்வதற்காக தண்டபாணி நிலையம் வருகை தந்து அறை எடுத்து தங்கி காலையிலே தரிசனத்திற்கு கோவிலுக்கு சென்றுள்ளனர்.

இந்நிலையில் பத்மாவதி நிறுவனத்தைச் சேர்ந்த திருக்கோயில் தூய்மை பணியாளர்களின் கண்காணிப் பாளர் இரமேஷ் என்பவரின் கவனக்குறைவால் கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் வாங்கிய சானிடைசர் ட்ரம்களை அகற்றப் படாமல் பொது இடத்தில் வைத்துள்ளார்.

இதனையடுத்து அந்தக் கேன்களை எவித பாதுகாப்பு கருவிகளும் இல்லாமல் முருகன் மற்றும் பிச்சைமுத்து என்ற தூய்மை பணியாளர்களை வைத்து அப்புறப்படுத்த முயன்ற பொழுது திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் தூய்மை பணியாளர்கள் உடலில் தீக்காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மேலும் அருகில் இருந்த கேரளா பதிவு எண் கொண்ட கார் மலமலவென தீப்பற்றி எரியத் தொடங்கி கார் முழுவதும் தீயில் கருகினர். கார் வெடித்து விடும் என்ற அச்சத்தில் அங்கு இருந்த பக்தர்களும் பொதுமக்களும். மொட்டை அடிக்கும் பணியாளர்களும் அந்த இடத்தை விட்டு ஓடினர்.

விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் தண்ணீரை பீச்சி அடித்து தீயை அணைத்தனர். நீண்ட நேரமாக தீயை அணைக்க முடியாமல் போராடினர். தொடர்ந்து பக்தர்கள் தங்கும் வளாகத்தில் சனிடேசர் கேக்களை வைத்து அலட்சியமாக செயல்பட்ட தூய்மை பணியாளரின் மேலாளர் இரமேஷ் என்பவர் மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும். மேலும் பக்தர்கள் தங்கும் வளாகத்தில் தூய்மை பணியாளர்களுக்கு அறை ஒதுக்கீடு செய்யக் கூடாது, தூய்மை பணிகளுக்கான உபகரணங்கள் தங்கும் வளாகத்தில் வைக்கக் கூடாது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை பக்தர்கள் வைத்து வருகின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு உடனடியாக பத்மாவதி நிறுவனத்தின் மூலம் நிவாரணம் வழங்க வேண்டும் கோயில் நிர்வாகம் அலட்சியமாக செயல்பட்ட மேலாளர் இரமேஷ் மீது நடவடிக்கை மேற்கொண்டு பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை சமூக ஆர்வலர்களும் தன்னார்வலர்களும் பொதுமக்களும் பக்தர்களும் தெரிவித்து வருகின்றனர்..

# தென்காசி மாவட்டம் ரவணசமுத்திரம் சாதனை சகோதரிகள் சாம்பியன் புக் ஆஃப் வேர்ல்ட் ரிக்கார்டிற்கு தேர்வு..




தென்காசி டிச.4.

தென்காசி மாவட்டத்தில் யோகா, ரோலர் ஸ்கேட்டிங்கில் பல்வேறு சாதனைகள் செய்தும் தொடர்ந்து பல சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வரும் கடையம் இரவணசமுத்திரத்தை சேர்ந்த வாசுதேவநல்லூர் எஸ்.தங்கப்பழம் மருத்துவ கல்லூரி மாணவி மிஸ்பா குற்றாலம் செய்யது பள்ளி மாணவி ஷாஜிதா ஆகிய சகோதரிகள் சாம்பியன் உலகசாதனை புத்தகத்திற்கு தேர்வாகி உள்ளனர். தென்காசி மாவட்டம் கடையம் அடுத்த இரவணசமுத்திரம் கிராமத்தை சேர்ந்த மளிகை கடை ஊழியரான முகம்மது நஸீருதீன் ஜலிலா தம்பதிகளின் மகள்கள் குற்றாலம் செய்யது பள்ளியில் 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவி சாதனைச்சுடர் விருது பெற்ற ஷாஜிதா ஜைனப், வாசுதேவநல்லூர் எஸ். தங்கப்பழம் இயற்கை மற்றும் யோகா மருத்துவக்கல்லூரி முதலாமாண்டு பி.என். ஒய்.எஸ் மாணவி சிங்கப்பெண் விருது பெற்ற மிஸ்பா நூருல் ஹபிபா ஆகிய சகோதரிகள் யோகா, ரோலர் ஸ்கேட்டிங்கில் போட்டிகள் மட்டுமில்லாமல் பல சமூக விழிப்புணர்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றனர்.

பல விருதுகளையும் வாங்கி குவித்து வருகின்றனர். இவர்களுக்கு பயிற்சி ஆசிரியராக குற்றாலம் குருகண்ணன் என்பவர் இருந்து வருகிறார், இந்த அக்கா/தங்கை கல்வியுடன் இவர்களது சாதனைகள், சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள் அனைத்தும் அனைவராலும் பாராட்டும் விதம் அமைந்துள்ளது இவர்களது திறமைகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில் ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் உள்ள சாம்பியன் புக் ஆஃப் வேர்ல்ட் ரிக்கார்ட் என்ற அமைப்பு இச்சகோதரிகளை சாதனை புத்தகத்தில் இடம் பெற தேர்ந்து எடுத்துள்ளனர். இச்சகோதரிகளுக்கு ஊர் மக்கள் சார்பாகவும் மாலைத் தந்தி மாலை தினசரி நாளிதழ் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள்.

# உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து கலந்தாய்வு கூட்டம்



சிவகங்கை டிச.4

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ''உங்கள் தொகுதியில் முதல்வர்'' திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய

பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து, சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் மேற்கொண்டார். சிவகங்கை மாவட்டம் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து, சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் மேற்கொண்டு தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில், பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவது மட்டுமன்றி, பொதுமக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தி வருகிறார்கள்.

பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றிடும் வகையில், மக்களுடன் முதல்வர், உங்களைத் தேடி உங்கள் ஊரில், உங்கள் தொகுதியில் முதல்வர் போன்ற பல்வேறு திட்டங்களும் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, தகுதியுடைய மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சிவகங்கை மாவட்டத்தில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பொதுமக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றும் பணி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர, மாவட்டம் முழுவதும் மக்கள் பிரதிநிதிகள் வாயிலாகவும் பொதுமக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டு, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அரசின் திட்டங்கள் வாயிலாகவும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழும் மற்றும் தனிப்பட்ட முறையில் எனது சொந்த நிதியின் கீழும் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதில், உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரளிக் கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்கென முன்னதாக எனது சார்பில் 02.45 ஏக்கர் நிலம் வழங்கப் பட்டுள்ளது. அதனை, தற்போது தரம் உயர்த்துவதற்கான பணிகள் குறித்தும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குடோன் மற்றும் 200 மெட்ரிக் டன் குளிர்பதன கிடங்கு (பழ வகைகளை பதப்படுத்துதல்) அமைப்பதற்கான பணிகள் தொடர்பாகவும், சிங்கம்புணரி பகுதியில் முன்னதாகவே அரசிற்கு பரிந்துரைக்கப்பட்ட கொப்பரைத் தேங்காய் வணிக வளாகம் அமைப்பதற்கான பணிகள் குறித்தும், சிங்கம்புணரி பகுதியில் புதிதாக ஒரு பஸ் டிப்போட் அமைப்பதற்கு போதுமான இடம் தேர்வு செய்வதற்கான பணிகள் குறித்தும்,

அதேபோன்று, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுற்றுலா தளங்களான பிள்ளையார்பட்டி, திருக்கோஷ்டியூர், பட்டமங்களம், பிரான்மலை, குன்றக்குடி, செட்டிநாடு, வேட்டங்குடிபட்டி பறவைகள் சரணாலயம் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான கூடுதல் வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் குறித்தும், சிங்கம்புணரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 8 புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடம், உலகம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 5 புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடம், திருக்களாபட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் 3 புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடம், அ.காலப்பூர் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் 4 புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் ஆகியவைகளை புதிதாக கட்டுவதற்கான பணிகள் குறித்தும் இக்கூட்டத்தில் சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்படுகிறது.


மேற்கண்ட பணிகள் குறித்து தங்களது துறை ரீதியாக உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து, சிறப்பு திட்ட செயலாக்கத்துறையின் மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பி வைத்திடல் வேண்டும். அவை தொடர்பாக, சம்மந்தப்பட்ட துறை ரீதியான அமைச்சர் பெருமக்களிடமும் எடுத்துரைத்து, பணிகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுபோன்று, மாவட்ட முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு பணிகள் குறித்தும், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.இரா. சிவராமன் மாவட்ட வன அலுவலர் பிரபா, இணை இயக்குநர் (வேளாண்மை) சுந்தர மகாலிங்கம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து, துணை இயக்குநர் (வேளாண் வணிகத்துறை) தமிழ்செல்வி உட்பட துறை சார்ந்த முதல் நிலை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பறை செயல்பட்டு வந்தது தற்போது புதிய கட்டண கழிப்பறை கட்டப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது பழைய கட்டண கழிப்பறைக்கு பயன்பாட்டில் இருந்த மின் மோட்டார் திருடுபோய் உள்ளது. பராமரிப்பு மேற்கொள்வதற்காக வந்த ஊழியர் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதியில் மின் மோட்டார் காணாமல் போனது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் நரிக்குடி ஒன்றியம் டி. கடம்பன்குளம் கிராமத்தின் கண்மாயில் ஊராட்சி மன்ற தலைவர், ஊராட்சி செயலாளர் ஊரணி அமைக்க வேண்டும் கிராம பொதுமக்களிடம் தெரிவித்துள்ளனர். நத்தம் புறம்போக்கில் மட்டுமே ஊரணி அமைக்க வேண்டும் என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள கண்மாயில் பணி மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது. பொதுப்பணித்துறை கண்மாயில் ஊரணி அமைத்தால் கண்மாய்க்கு தண்ணீர் சேமிக்க முடியாது மேலும் டி. கடம்பன்குளம் கிராமத்திற்கு சொந்தமான கன்மாயில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு இதுகுறித்து பொதுப்பணித் துறை மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா கண்மாய் மீட்கப்படுமா என்று கேள்வி எழுந்துள்ளது?







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையம் அருகே கிழங்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த சங்கர் என்பவர் மிதிவண்டியில் மதுரை ராமேஸ்வரம் சாலையை கடக்கும் முயன்ற போது மதுரையை நோக்கிச் சென்ற TN58BB2241 பதிவெண் கொண்ட கார் மீது மோதியதில் சங்கர் பலத்த காயம் ஏற்பட்டது. பாதுகாப்பு பணியில் இருந்த போக்குவரத்து ஆய்வாளர் வெங்கடேஸ்வரன் மற்றும் பொதுமக்கள் அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

## 189வது மாமன்ற உறுப்பினர் வ.பாபு தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா






சோழிங்கநல்லூர் டிச.4

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணையில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுபிரமணியன் ஆலோசனைப்படி, நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திமுக அரசின் சாதனை விளக்க கூட்டம் மாலை 6 மணிக்கு மாநகராட்சி அலுவலகம் அருகில்189 வது மாமன்ற உறுப்பினர், வட்டக் கழக செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு குழு உறுப்பினருமான லயன் வ.பாபு தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் திமுக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள்.

தொடர்ந்து தலைமை கழக பேச்சாளர் மகிழவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

## மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கிடையேயான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கிய ஈரோடு மாவட்ட ஆட்சியர்

ஈரோடு டிச.4

ஈரோடு மாவட்டம், கூரபாளையம் நந்தா இயன்முறை கல்லூரியில் மாவட்ட ஆட்சியர் ராஜ கோபால் சுன்கரா உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு, மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ராஜகோபால் சுன்கரா கூறியதாவது,

உலக மாற்றுத்திறனாளிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3 அன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது.அந்த வகையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு சிறப்பு பள்ளிகள், அரசு உதவி பெறும் சிறப்பு பள்ளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் துறையின் கீழ் அங்கீகாரம் பெற்று நடத்தப்படும் சிறப்பு பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் 10 பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டதில், 240 மாணவ, மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது.

மேலும் ஈரோடு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் 20232024ம் ஆண்டில் 8260 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.18.15 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகள் அனைத்தும் இணைதளம் மூலம் பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கு தேவையான உதவி உபகரணங்கள், உதவித் தொகை உள்ளிட்ட சேவைகளை மாவட்ட ஆட்சியரகத்தில் செயல்படும் இ சேவை மையத்தினை அணுகிவிண்ணப்பித்து, பயன்பெறலாம். 3 சக்கர வாகனங்கள் வழங்குதற்கான நேர்காணல் நடத்தப்பட்டு, மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் நடப்பாண்டில் 50 நபர்களுக்கு 3 சக்கர வாகனங்கள் வழங்குதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல் மாவட்ட நிர்வாகம் சார்பாக, செவிதிறன் குறையுடை மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டும் ஓட்டுநர் உரிமம் வழங்கும் பொருட்டு, இ சேவை மையத்தில் றிகிஸிமிகூஷிகிபிகிழி என்ற இணையதளத்தில் வழியாக பதிவேற்றம் செய்திட சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலைவாய்ப்பு வேண்டி விண்ணப்பிக்கும்

மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் வேலைவாய்ப்பு துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் தெரிவு செய்யப்பட்ட 42 மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பங்கு தொகை செலுத்துவதற்கு ஏதுவாக, கூட்டுறவுத்துறையின் மூலம் ரூ.1.00 இலட்சம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்பட்டுவருகிறது. எனவே மாற்றுத்திறனாளிகள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் இதுபோன்ற திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், ஆர்.என்.புதூர் செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி, செங்கோடம்பாளையம் கொங்கு அறிவாலயம் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி, முத்தம்பாளையம் கோகுலம் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி, மாமரத்துப்பாளையம் சக்தி மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி, மொடக்குறிச்சி முத்தாயிபாளையம் பாரதியார் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி, சென்னிமலை தோப்புப்பாளையம் உதயம் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி, செங்கோடம்பாளையம் ஈரோடு அரிமா சொசைட்டி மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பள்ளி, திருநகர் காலணி வி.எக்ஸல் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப்பள்ளி, ஆருத்ரா மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப்பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டதில், முதல் 3 இடங்களை பெற்ற 240 மாணவ, மாணவர்களுக்கு பரிசுகளையும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,50,174/ மதிப்பீட் டில் தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

தொடர்ந்து, மாணவ, மாணவியர்களின் பங்கேற்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

முன்னதாக, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் ஆகியோர் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனுடையோர் நலச்சங்கம் மற்றும் ஈரோடு சென்ரல் ரோட்டரி சங்கம் இணைத்து நடத்திய விழிப்புணர்வு வாகன பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, இளநிலை மறுவாழ்வு அலுவலர் குழந்தைசாமி, நந்தா கல்வி நிறுவன தலைவர் வி.சண்முகம் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4 சார்பில் மோளக்கவுண்டன்பாளையம் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் வருமுன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாம்

ஈரோடு டிச.4

ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4 சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாம் ஈரோடு மோளக்கவுண்டன்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு ஈரோடு மாநகராட்சி ஆணையர் மருத்துவர் மணிஷ் தலைமை தாங்கினார் மாநகர செயற்பொறியாளர் விஜயகுமார் வரவேற்றார் இதில் ஈரோடு மாநகராட்சிமேயர் நாகரத்தினம் சுப்பிரமணி கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து முகாமை துவங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் மற்றும் மருத்துவப்பெட்டகங்களை வழங்கினார் துணை மேயர் பி செல்வராஜ் முன்னிலை வகித்தார் முகாமில் பொது மருத்துவம் குழந்தைகள் நல மருத்துவம் மகப்பேறு நல மருத்துவம் அரங்குகள் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு



பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மற்றும் ரத்த அழுத்த பரிசோதனைகள் ஸ்கேன் பரிசோதனை கர்ப்பப்பை வாய் பரிசோதனை தொழுநோய் பரிசோதனை ஆகியவையும் நடத்தப்பட்டது மேலும் இலவச மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது இதில் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர் முகாமில் ஒன்றாம் மண்டல தலைவர் பி.கே. பழனிச்சாமி நான்காம் மண்டல தலைவர் நா. தண்டபாணி மற்றும் கவுன்சிலர்கள் ராமலிங்கம் தண்டபாணி உதவி செயற்பொறியாளர் முருகானந்தம் செந்தாமரை சுகாதார அலுவலர் சிவக்குமார் சுகாதார ஆய்வாளர்கள் நல்லசாமி, கதிரேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர் முடிவில் மாநகர நல அலுவலர் மா கார்த்திகேயன் நன்றி கூறினார்..

## பலூன் டெக்கரேசன் தொழிலை, தமிழ்நாடு அரசு சிறுதொழிலாக அங்கீகரிக்க தமிழ்நாடு பலூன் டெக்கரேசன் சங்கம் கோரிக்கை

ஈரோடு டிச.4

ஈரோட்டில் தமிழ்நாடு பலூன் டெக்கரேட்டர் சங்க அறிமுக விழா நடைபெற்றது.



இந்த விழாவில் தமிழ்நாடு தலைவர் மணிகண்டன் பலூன் டெகரேட்டர்களுக்கு அடையாள அட்டை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியின் போது செய்தியாளர்களிடம் பேசிய ஈரோடு மாவட்ட செயலாளர் அப்துல் கூறுகையில், எங்கள் தொழிலை சிறுதொழிலாக அங்கீகரிக்க வேண்டும் கடன் வசதி மற்றும் மானியம் உள்ளிட்டவற்றை அரசிடம் எதிர்பார்க்கிறோம். தனியாக நலவாரியம் உருவாக்க வேண்டும் காப்பீடு, ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்தார்.




நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைவர் மணிகண்டன்,திருப்பூர், கரூர், சேலம், கோயம்புத்தூர் மாவட்ட பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். மாவட்ட தலைவராக செல்வம், செயலாளராக அப்துல், பொருளாளராக ரமேஷ் தேர்வு செய்யப்பட்டனர்.

# செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அகரம்தென்னில் ஊராட்சி மன்ற தலைவரை கைது செய்து நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தூத்துக்குடி, டிச.4

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் பகுதியைச் சார்ந்தவர் கணேசன் (வயது44). இவர் தாம்பரம் அடுத்த சேலையூர் அகரம் தென் பகுதியில் கிருஷ்ணா டிரேடர்ஸ் என்ற பெயரில் பழைய பொருட்களை வாங்கி விற்பனை செய்யும் கடையை 7 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.



இந்த நிலையில் கடையில் கணேசன் மற்றும் ஊழியர்கள் பணி புரிந்து கொண்ட போது, கடைக்கு வந்த அகரம்தென் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகன் என்ற ஜெகதீஸ்வரன் தனது குதிரை நிறுத்துவதற்கான கூடாரம் அமைக்க அங்கு கடையில் வைத்திருந்த பத்து இரும்பு பைப்புகளை கேட்டுள்ளார்.

கடை உரிமையாளர் கணேசன் வழங்கிய போது அதற்கு பணம் தரவில்லை என கூறப்படுகிறது. இதனால் கடை உரிமையாளர் கணேசன் வாங்கிய பொருளுக்கு பணம் கேட்கும் போது தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்தநிலையில் நேற்று காலை ஊராட்சிமன்ற தலைவர் ஜெகன் கணேசன் கடைக்கு சென்று என்னிடமே பணம் கேட்கின்றீரியா.... கடைக்கு வரி கட்டுனியா என்று ஆபாசமாக பேசி உள்ளார். மேலும் உன் கடையை ஒரு வாரத்தில் மூடி விடுவேன் எப்படி கடை நடத்துகிறாய் பார்ப்போம் , என்றும் திருட்டு பொருளை விற்கிறாயா உன் மீது காவல்நிலைக்கு புகார் அளித்து உனக்கு ஒரு லட்ச ரூபாய் செலவைப்பேன் பார்க்கிறாயா என்றும், ஊரை விட்டு ஊரை பிழைக்க வந்த என்கிட்டயா என பகிரமாக ஊராட்சி மன்ற தலைவர் மிரட்டல் விடும் வீடியோ வெளியாகி உள்ளது.

மேலும் கடை உரிமையாளரான கணேசனை தள்ளி விட்டதாகவும் கூறப்படுகிறது கீழே விழுந்துதல் கையில் தலையில் காயம் பட்டதாக குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுள்ளார்.

இது தொடர்பாக தமிழ்நாடு நாடார் சங்கத்தின் தலைவர் முத்து ரமேஷ் நாடார், நாடர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் மின்னல் ஸ்டீபன் மற்றும் தாம்பரம் ஞானப்பால் வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் பாதிக்கப்பட்ட வியாபாரியை நேரில் பார்வையிட்டு நடந்தவற்றை கேட்டறிந்தனர்.

பின்னர் சேலையூர் காவல்நிலையத்திற்கு சென்று ஊராட்சிமன்ற தலைவரை கைது செய்யவும் வலியுறுத்தினர்.

# தமிழ்நாடு மாநில அளவிலான எண்கணித மேதை போட்டி




மதுரை: டிச.4

எஸ் x பி எண்கணித மேதை போட்டியின் (AGC) 9வது பதிப்பு 2024 டிசம்பர் 1ஆம் தேதி, மதுரையில் உள்ள தமுகம் மைதான மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. தமிழகம் முழுவதிலும் உள்ள 220 பள்ளிகளைச் சேர்ந்த 3000க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்பதன் மூலம் இதுஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது. தமிழகம் முழுவதும் ஆரம்ப சுற்றில் சுமார் 82,000 மாணவர்கள் போட்டியில் கலந்து கொண்டனர் அந்தச் சுற்றில் இருந்து 30,000 பேர் மண்டலச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மண்டலச் சுற்றில் இருந்து 3,000 முதலிடம் பெற்றவர்கள் மாநிலச் சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

எஸ் x பி எண்கணித மேதை போட்டி என்பது இளம் மாணவர்களிடையே எண் கணிதத்தின் மீதான ஆர்வத்தை தூண்டுவதற்கும் திறன் மேம்பாட்டின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு வருடாந்திர போட்டியாகும். இந்த ஆண்டு, அகில இந்திய அளவில், 23 மாநிலங்களில் உள்ள 1,450+ பள்ளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 6 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்று சாதனை படைத்துள்ளனர்

# நெல்லை மண்டலத்தில் போலி சான்றிதழ் கொடுத்து அரசு பணியில் சேர்ந்த 78 பேர் டிஸ்மிஸ்

தென்காசி டிச.4

தென்காசி, நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் பணியாற்றி வந்த பலர் மாற்றுத்திறனாளி எனக்கூறி போலி சான்றிதழ் வழங்கி பணிக்கு சேர்ந்ததாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், இது தொடர்பாக ஒருவர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு ஒன்றையும் தொடர்ந்தார்.

இந்த வழக்கின் அடிப்படையில், உயர் நீதிமன்ற நீதிபதி இது தொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிட்ட நிலையில், குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு மருத்துவ பரிசோதனையானது நடைபெற்றது.

இந்த பரிசோதனையில் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் இல்லை என்பது தெரிய வரவே, இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழக அரசு உரிய விளக்கம் அளிக்கவும், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்பது குறித்து விளக்கம் அளிக்கவும் உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்த நிலையில், தற்போது தென்காசி மாவட்டத்தில் உள்ள புதூர், வடகரை, அச்சன்புதூர், கீழப்பாவூர், சிவகிரி, ராயகிரி, இலஞ்சி உள்ளிட்ட பேரூராட்சிகள் உள்பட நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட நெல்லை மண்டலத்தில் உள்ள பேரூராட்சிகளில் 78 பேர் மாற்றுத்திறனாளி எனக்கூறி போலி சான்றிதழ் கொடுத்து பணியாற்றி வந்த நிலையில், தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பணி நீக்கமானது அந்தந்த பேரூராட்சி செயல் அலுவலர்கள் மூலம் அந்த பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்டதாக கூறப்படும் நிலையில், பல வருடங்களாக போலி சான்றிதழ் கொடுத்து அரசு பணியில் பணியாற்றி ஊதியம் பெற்று வந்த பலர் தற்போது டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ள சம்பவம் தென்காசி, நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.




வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, அண்ணா கலை அரங்கம் அருகில், வேலூர் மாவட்ட அனைத்து இஸ்லாமிய கூட்டமைப்பின் சார்பில் மசூதிகளை குறிவைத்து நாட்டின் அமைதியை சீர்குலைத்து இஸ்லாமியர்களின் உயிரை பறிக்கும் பாஜக ஆளும் மத்திய மாநில அரசை கண்டித்து இஸ்லாமிய கூட்டமைப்பின் தலைவர்கள், செயலாளர்கள் தலைமையிலும், முக்கிய பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நிலையிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் மாவட்ட அனைத்து கூட்டமைப்பு நிர்வாகிகள் உறுப்பினர்கள் என 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பி, மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கன மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிய அமைச்சர் பொன்முடி



திருக்கோவிலூர் டிச.4

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் நகரத்தை சார்ந்த பிள்ளையார் கோயில் தெரு,கீழையூர் தாசர் புரம் பகுதி வாழ் மக்கள் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு போர்வைகள், உணவுப்பொருட்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த், திருக்கோவிலூர் சார் ஆட்சியர் ஆனந்தகுமார், விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மருத்துவர்.பொன். கௌதமசிகாமணி,மாவட்ட பொருளாளர் ஜனகராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைப்பெருந்தலைவர் மு.தங்கம்,நகர்மன்றத்தலைவர் தி.ந.முருகன்,தலைமை செயற்குழு உறுப்பினர் து.செல்வராஜ்,நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் பிவிஆர்.சு.விசுவநாதன்,அ.சா.ஏ.பிரபு, அரகண்டநல்லூர் பேரூராட்சி தலைவர் அன்பு, நகராட்சி ஆணையர் திவ்யா,வருவாய் வட்டாட்சியர் ராமகிருஷ்ணன்,ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள்,வருவாய் துறை அலுவலர்கள்,நகரமன்ற உறுப்பினர்கள்,ஒன்றிய உள்ளாட்சி பிரதிநிதிகள்,ஒன்றிய,நகர கழக செயலாளர் மற்றும் கழகத்தினர்கள் திரளானோர் பங்கேற்றனர்.

# கல்லலில் சுற்றுச்சூழல் மேம்பாடு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு பேச்சுப் போட்டி

கல்லல் டிச.4







சிவகங்கை மாவட்டம் கல்லலில் தேசிய பசுமை படை சார்பாக சுற்றுச்சூழல் மேம்பாடு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு பேச்சுப் போட்டியானது பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி அரங்கத்தில் நடைபெற்றது. சிவகங்கை மாவட்டப் பசுமை படை ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ தலைமை வகித்து போட்டிகளை தொடங்கி வைத்தார். அரசு உயர்நிலைப்பள்ளி சொக்க நாதபுரம் தலைமை ஆசிரியர் புகழேந்தி முன்னிலை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயசீலன் வரவேற்புரை ஆற்றினார். சுற்றுச்சூழல் குறித்த பேச்சு போட்டியானது 6,7,8 வகுப்பு மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும் 9,10 வகுப்பு மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும் நடைபெற்றது. நடுவர்களாக ஆசிரியர்கள் ஸ்டீபன் கணேசன் செந்தில் செல்வி புனிதா சிறப்பாக பணியாற்றினர். 6,7,8 வகுப்பு பிரிவுகளில் அகமது அப்சல் முதலிடத்தையும் டேனியல் பிரியன் இரண்டாமிடத்தையும் சுகிதாஸ்ரீ மூன்றாமிடத்தையும் பெற்று பரிசுகளை பெற்றனர். 9,10 வகுப்பு பிரிவில் நர்மதா முதலிடத்தையும் வைஷ்ணவி இரண்டாமிடத்தையும் சுவாதிகா மூன்றாமிடத்தையும் பெற்றனர். உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

வீறுகவி முடியரசனார் நினைவு தினம் நினைவு கூறப்பட்டது. அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பிரபு நன்றி கூறினார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். ஆசிரியர்கள் தனுஷ்ஸ்டாலின் ஆரோக்கியராஜா பிரதாப் ஆசிரியர் பயிற்றுநர்கள் வானவில் மன்ற கருத்தாளர் பிரான்சிஸ் சோனியா மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி தனியார் கல்லூரியில் மாற்றுத்திறனாளிகள் தின விழா, அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு தனியார் கல்லூரி, அண்ணா கலை அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 80 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3.01 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விழாவில் சிறப்புரையாற்றி நல திட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மக்கள் பிரதிநிதிகள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் சரவணன், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மண்ணிவாக்கத்தில் கிராம காங்கிரஸ் கட்சியின் கமிட்டி கலந்தாலோசனை மற்றும் அறிமுகம் கூட்டம்



செங்கல்பட்டு டிச4

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்துர் ஒன்றிய மண்ணிவாக்காத்தில் கிராம காங்கிரஸ் கட்சியின் கமிட்டி கலந்தாலோசனை மற்றும் அறிமுகம் கூட்டம் எம்.ஆர்.மோகன் தலைமையில் மாவட்டத் துணைத் தலைவர் இரா.ஆனந்தராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக செங்கல்பட்டு தெற்கு மாவட்ட தலைவர் வழக்கறிஞர் சுந்தரமூர்த்தி, மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்,ஏழுமலை, காட்டாங்குளத்தூர் வட்டார தலைவர் உனை ஜனாகிராமன், ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி புதிய நிர்வாகிகளுக்கு அறிமுகம் படுத்தி சால்வை அணிவித்து மரியாதை செய்தனர் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆசிரியர் பட்டதாரி தலைவர் தவசெழியன், காட்டாங்குளத்தூர் வட்டாரத் துணைத் தலைவர் எம்.ஆர்.இளையராஜா, செயலாளர் ஏ.பிரபு, பொதுச் செயலாளர் ஜி.பரமசிவம், வட்டார மகளிர் அணி செயலாளர் ஜி.சுகந்தி, இளைஞர் அணி மாவட்ட துணைச் தலைவர் ஞானசேகரன், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி இளைஞரணி துணை தலைவர் அருண்குமார், மோகன், ரமேஷ், தேவா, கதிரவன், நீலமேகன், விஜி, கண்ணன், பார்த்திபன், பவுல் என்கின்ற முருகன், ரூபன், ராஜேந்திரன், கார்த்திக், விஷால், எஸ்வந்த், இருசப்பன், குணசேகரன், ஏழுமலை, மணிகண்டன், அப்புகுட்டி, மூர்த்தி, வினோத், மற்றும் நெடுங்குன்ற ஊராட்சி காங்கிரஸ் கமிட்டி தலைவர் கந்தசாமி ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..




சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்களின் வழிகாட்டுதல் படியும் இளையான்குடி வட்ட சட்டப் பணிகள் குழுவின் தலைவர் நீதிபதியுமான ஹரி ராமகிருஷ்ணன் உத்தரவின் வழிபடி இளையான்குடி பகுதி பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பட்ட சட்ட பணிகள் குழுவின் சார்பில் தேசிய சட்டப் பணிகள் இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை பெறுவதற்கான தொலைபேசி எண் :15100, இணைய வழி https://nalsa.gov.in/lsams/ முகவரி உடைய விளம்பர பதாகைகளை இளையான்குடி பேருந்து நிலையம் , இளையான்குடி அரசு மருத்துவமனை, காவல் நிலையங்கள், அரசுப்பள்ளிகளில் பொதுமக்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது



தென்காசி நகர்மன்ற கூட்ட அரங்கில் பாரத பிரதமர் நரேந்திர மோடியின் புகைப்படம் வைக்க வேண்டும் என்று நேற்று பாரதிய ஜனதா கட்சி நகர்மன்ற உறுப்பினர் மு.சுனிதா கோரிக்கை மனு அளித்துள்ளார்.




தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் உள்ள ஜீவன் ஜோதி நல மையத்தில் தமிழ்நாடு எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம் மற்றும் தேனி மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு இணைந்து உலக எய்ட்ஸ் அனுசரிப்பு தினம் நடந்தது. தேனி மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்ட மேலாளர் முகமது பரூக் வரவேற்று பேசினார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161